முழுப் பதிப்புரிமையுடையது All Rights Reserved] 

கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு
Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministr

**கல்வி அமைச்சு**

**சமயம் மற்றும் விழுமியக் கல்விக் கிளை - இந்துசமயம்**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர்தர)ப் பரீட்சை - 2024

**General Certificate of Education (Adv. Level) Examination - 2024**

இந்துநாகரிகம் **I**
**Hindu Civilization I**

**46 T I**

*இரண்டு மணித்தியாலம்*
***Two hours***

- **1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

01. ஆர்ச்சிகம், உத்தரார்ச்சிகம் என்னும் இரு பிரிவுகளைக் கொண்ட வேதம்
1) யசுர் 2) இருக்கு 3) சாமம்
4) அதர்வம் 5) காந்தர்வம் (…..)

02. மருத்துவர்களுக்கு மானியமாக 'மருத்துவப்பேறு' என்னும் பெயரில் நிலம் வழங்கப்பட்ட காலம்
1) பல்லவர் காலம் 2) சங்ககாலம் 3) சோழர்காலம்
4) நாயக்கர் காலம் 5) குப்தர் காலம் (…..)

03. முத்திரைகளில் உள்ள எழுத்து வடிவங்கள் பசுபதி என்னும் பெயரைச் சுட்டுவதாகக் குறிப்பிட்ட அறிஞர்
1) டாக்டர்.மா.இராசமாணிக்கனார் 2) டாக்டர்.மக்கே 3) சேர்.ஜோன் மார்ஷல்
4) சேர்.வில்லியம் ஜோண்ஸ் 5) ஜாகோபர் (…..)

04. இந்திய அறுவை சிகிச்சையின் தந்தை எனப் போற்றப்படுபவர்
1) ஆத்திரேயர் 2) அக்கினிவேசர் 3) தன்வந்திரி
4) சுஸ்கிதர் 5) சரகர் (…..)

05. அராலி இராமலிங்க முனிவரால் எழுதப்பட்ட சோதிட நூல்
1) சந்தானமணி 2) சரசோதிமாலை 3) விதானமாலை
4) சாதகபாஸ்கரன் 5) சந்தானதீபிகை (…..)

06. பண்பாட்டின் அமைப்பையும் மீட்டுருவாக்கத்தையும் தீர்மானிக்கும் பிரதான காரணியென்று T.S. எலியட் கூறுவது
1) அறிவியல் 2) சமயம் 3) ஒழுக்கம்
4) நாகரிகம் 5) கலையுணர்வு (…..)

07. 'அண்ணல் அருளில் அருளும் சிவாகமம்…..' என்று பாடியவர்
1) மாணிக்கவாசகர் 2) திருமூலர் 3) திருநாவுக்கரசர்
4) உமாபதி சிவாசாரியார் 5) மெய்கண்டதேவர் (…..)

08. சோதிடக்கலை மரபில் மகரிஷியாகப் போற்றப்பட்டவர்
1) விசுவாமித்திரர் 2) வராகமிகிரர் 3) அகத்தியர்
4) கார்க 5) வசிட்டர் (…..)

09. கிரகங்களின் அசைவுக் கணிப்புப் பற்றிக் குறிப்பிடும் பண்டைய வானியல் கோட்பாடு
1) பிதாமஹகோட்பாடு 2) நட்சத்திரக்கோட்பாடு 3) சூரியக்கோட்பாடு
4) புளிஷகோட்பாடு 5) சந்திரக்கோட்பாடு (…..)

10. மாமல்லபுரக் கலைக்கூடத்தை அமைத்த மன்னன்
1) இராஜசிம்மன் 2) 1ம் நரசிம்மவர்மன் 3) மகேந்திரவர்மன்
4) பரமேஸ்வரவர்மன் 5) நந்திவர்மன் (…..)

11. சைவசித்தாந்தம் கோட்பாட்டு வடிவம் பெறுவதற்கு பிரதானமாக அமைந்த இலக்கியம்
1) ஆகமம் 2) திருவருட்பயன் 3) திருமந்திரம்
4) வேதம் 5) சிவஞானபோதம் (…..)

12. ‘ஒரு சிறு தொகையினரான மாணாக்கரே ஓர் ஆசிரியரிடம் கற்றல் வேண்டும்’ என்னும் இலட்சியத்தையுடைய இலக்கியம்
1) அர்த்தசாஸ்திரம் 2) திருக்குறள் 3) நாலடியார்
4) ஸ்மிருதி 5) திருமந்திரம் (…..)

13. தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவிய கல்வியின் நோக்கம்
1) தொழில்சார் நோக்கம் 2) தனியாள் நோக்கம் 3) சமூகநோக்கம்
4) அரசநோக்கம் 5) பொருளாதார நோக்கம் (…..)

14. திருப்பதி, சிதம்பரம், காளகஸ்தி, திருவரங்கம் முதலிய கோயில்களில் திருப்பணிகள் செய்த விஜயநகர மன்னன்
1) முதலாம் புக்கன் 2) கிருஷ்ணதேவராயர் 3) கரிகரர்
4) இராமராயர் 5) குமாரகம்பணன் (…..)

15. சிவதர்மோத்திரம் என்னும் ஆகமத்திற்கு உரை எழுதியவர்
1) சிவாக்கிரகயோசிகன் 2) மறைஞானசம்பந்தர் 3) உமாபதிசிவாசாரியார்
4) கச்சியப்பமுனிவர் 5) எல்லப்பநாவலர் (…..)

16. ‘உலகைத் தாங்குவதும் நிலைநிறுத்துவதும் எதுவோ அதுவே தர்மமாகும்’ என்று கூறும் இலக்கியம்
1) திருக்குறள் 2) திருமந்திரம் 3) பகவத்கீதை
4) தைத்திரிய உபநிடதம் 5) இருக்குவேதம் (…..)

17. ஔவையாருக்கு கோவில் அமைக்கப்பட்ட இடம்
1) ஐகொள 2) இராமேஸ்வரம் 3) துளஜாப்பட்டினம்
4) காஞ்சி 5) மாமல்லபுரம் (…..)

18. இன, மத பேதங்களுக்கு அப்பால் உறவுகள் அனைத்தையும் துறந்து விஷ்ணு ஒருவரையே தஞ்சம் எனக்கொண்டு வாழ்ந்த வட இந்திய பக்திநெறியாளர்
1) இராமானந்தர் 2) ஸ்ரீசைதன்யர் 3) மீராபாய்
4) துளசிதாசர் 5) கபீர்தாசர் (…..)

19. பிரமசூத்திர உரை செய்து ஒரு கடவுட்கோட்பாட்டைப் பரப்பிய சீர்திருத்தவாதி
1) தயானந்தசரஸ்வதி 2) மோகன்ராஜ் 3) விவேகானந்தர்
4) இராமலிங்க அடிகளார் 5) ஈ.வே.ரா.பெரியார் (…..)

20. அரசனுக்கு பொருளீட்டல் வழிவகைகள் பற்றி சிறப்பாக எடுத்துக்கூறும் இலக்கியம்
1) திருக்குறள் 2) தர்மசாஸ்திரம் 3) தர்மசூத்திரம்
4) அர்த்தசாஸ்திரம் 5) காமசூத்திரம் (…..)

21. “உன்னத இலட்சியத்தை நோக்கி வாழ்க்கையின் கடைசிப் பகுதிக்கு மனிதன் தனியாகவே நடந்துசெல்ல வேண்டும்” என்று கூறியவர்
1) விவேகானந்தர் 2) கிருஸ்ணபரமாத்மா 3) இராசமாணிக்கனார்
4) இராமகிருஸ்ணர் 5) டாக்டர். இராதாகிருஸ்ணன் (…..)

22. மக்களுக்குச் சேவை செய்து மானுட துன்பம் நீக்குவதை நடைமுறை வேதாந்தம் என்பதனைச் சாதனையாகக் கடைப்பிடித்தவர்
1) சங்கரர் 2) இராமகிருஸ்ணபரமகம்சர் 3) விவேகானந்தர்
4) மத்துவர் 5) வள்ளலார் (…..)

23. சட்டம், நீதிபரிபாலனம் என்பவற்றை மிகச் சிறப்பாக ஒழுங்குபடுத்திக்கூறும் ஸ்மிருதிகள்
1) பிரகஸ்பதிஸ்மிருதி, நாரதஸ்மிருதி
2) ஞாக்ஞவல்லியஸ்மிருதி, மனுஸ்மிருதி
3) மனுஸ்மிருதி, நாரதஸ்மிருதி
4) விஷ்ணுஸ்மிருதி, நாரதஸ்மிருதி
5) மனுஸ்மிருதி, விஷ்ணுஸ்மிருதி (…..)

24. திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம் ஆகிய தலங்கள் மீது சம்பந்தர், சுந்தரர் ஆகியோரால் பதிகங்கள் பாடப்பட்ட இலங்கை வரலாற்றுக் காலம்
1) சோழர்காலம்
2) பல்லவர்காலம்
3) அனுராதபுரக் காலம்
4) பொலநறுவைக்காலம்
5) ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் (…..)

25. ‘பா தாங்கும் கோவிலும் பொன் மண்டபமும்……’ என்ற பாடலில் சிறப்பிக்கப்பட்ட இலங்கைத் தலம்
1) திருக்கேதீச்சரம்
2) முன்னேச்சரம்
3) திருக்கோணேச்சரம்
4) நல்லூர்
5) கதிர்காமம் (…..)

26. முழுமுதற்கடவுட் கோட்பாட்டினையும் பிரபஞ்சக் கோட்பாட்டினையும் அறிவியல் சிந்தனைகளையும் இணைப்பதாக அமையும் வேதப்பகுதி
1) புருஷசூக்தம்
2) நாஸதீயசூக்தம்
3) கருமசூக்தம்
4) வருணசூக்தம்
5) இரணியசூக்தம் (…..)

27. தத்துவ சிந்தனைக் காலம் என்பது
1) சித்தாந்த காலம்
2) வேதாந்தகாலம்
3) பிரமசூத்திரகாலம்
4) வேதகாலம்
5) உபநிடதகாலம் (…..)

28. சேதுகாவலர் என அழைக்கப்பட்டவர்கள்
1) ஆரியச்சக்கரவர்த்திகள்
2) சோழர்கள்
3) பல்லவர்கள்
4) அனுராதபுரஅரசர்கள்
5) நாயக்கர்கள் (…..)

29. சித்தாந்த வித்தயானுபாலன் என்னும் அச்சகத்தை நிறுவியவர்
1) ஆறுமுகநாவலர்
2) சபாபதி நாவலர்
3) சங்கரசுப்பையர்
4) கல்முனை சிவஅன்பு
5) சேர்.பொன்.இராமநாதன் (…..)

30. யாகத்தின் போது ஏற்படும் ஞானத்திற்கு தடையான அம்சங்களைப் பற்றி விமர்சிக்கும் உபநிடதம்
1) பிருகதாரணிய உபநிடதம்
2) கடஉபநிடதம்
3) சாந்தோக்கிய உபநிடதம்
4) சுவேதாஸ்வரத உபநிடதம்
5) முண்டக உபநிடதம் (…..)

31. பெண்களுக்கான கல்வி முறை பற்றி விளக்கிய நாவலரது இலக்கியம்
1) 1ம் பாலபாடம்
2) யாழ்ப்பாணத்துச் சமயநிலை
3) 2ம் பாலபாடம்
4) சைவதூஷணபரிகாரம்
5) 3ம் பாலபாடம் (…..)

32. பிரபஞ்சத்தின் தோற்றம், முடிவு தொடர்பான கேள்விகளுக்கான விடைகளை உள்ளடக்கிய பிரமசூத்திர அத்தியாயம்
1) சமன்வயம்
2) அவிரோதம்
3) சாதனம்
4) பலம்
5) காலம் (…..)

33. ‘பிரபோதசைதன்யர்’ என்னும் பிரமச்சரிய நாமத்தினை சுவாமி விபுலானந்தருக்குச் சூட்டியவர்
1) இராமகிருஸ்ணர்
2) விவேகானந்தர்
3) சுவாமி சிவானந்தா
4) அபிநாசாநந்த அடிகளார்
5) சுவாமி பூரணானந்தர் (…..)

34. இந்திய தத்துவ ஆராய்ச்சியை மிக உன்னதமான ஒரு நிலைக்கு உயர்த்திய இலக்கியம்
1) சைவசித்தாந்தம்
2) வேதாந்தம்
3) பகவத்கீதை
4) பிரமசூத்திரம்
5) உபநிடதம் (…..)

35. சாதாரண மக்கள் முதல் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் வரை பயன்படுத்தப்பட்ட அருணாசல தேசிகரின் இலக்கியம்
1) சித்தாந்த சிரோண்மணி 2) சைவசமயசிந்தாமணி 3) மெய்ஞ்ஞானதீபம்
4) சைவ இலக்கியகதாமஞ்சரி 5) சைவசமயக் களஞ்சியம் (…..)

36. சங்கரரின் கருத்துப்படி பிரமத்தைச் சீவன்களாக்குவது
1) சிற்றறிவு 2) மாயை 3) அவித்தை
4) அறியாமை 5) ஆணவம் (…..)

37. வேதம் வேறு. தேவாரம் வேறு என்ற சர்ச்சைக்கு முடிவு கட்டியவர்
1) காசிவாசி செந்திநாதையர் 2) திருமூலர் 3) மெய்கண்டதேவர்
4) மாக்ஸ்மூலர் 5) தயானந்த சரஸ்வதி (…..)

38. அப்பிரதசித்திக்கொள்கை, பேதக்கொள்கை என்பவற்றின் மூலம் கருத்துக்களை முன்வைத்த வேதாந்தி
1) மத்துவர் 2) இராமானுஜர் 3) கௌடவபாதர்
4) சங்கரர் 5) விவேகானந்தர் (…..)

39. சைவத்திருக்கோவிற் கிரியை நெறி விளக்கம் என்னும் நூலை எழுதியவர்
1) ஆறுமுகநாவலர் 2) விபுலானந்தர் 3) காசிவாசி செந்திநாதையர்
4) அருணாசலதேசிகர் 5) கைலாசநாதக்குருக்கள் (…..)

40. மெய்கண்ட சாஸ்திர இலக்கியங்களில் மிக விரிவானதும் சிறப்புடையதுமான இலக்கியம்
1) திருவருட்பயன் 2) சிவஞானபோதம் 3) சிவப்பிரகாசம்
4) சிவஞானசித்தியார் 5) உண்மைநெறிவிளக்கம் (…..)

☞ **41- 45வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமானவற்றை i, ii, iii, iv ஆகிய நிரல்களிலிருந்து தெரிவுசெய்க.**

| i | ii | iii | iv |
|---|---|---|---|
| **A** ஐராவதேஸவரம் | **F** விக்ஷேபம் | **K** ஜலசயனம் | **P** நிர்க்குணப் பிரமம் |
| **B** குணபூரணன் | **G** வீணாதரன் | **L** அங்கம் அங்கித்தொடர்பு | **Q** வாச்சியமாராயன் |
| **C** விவர்த்தவாதம் | **H** மூவகை ஆன்மாக்கள் | **M** பிரமிட் வடிவ விமானம் | **R** வல்லம் |
| **D** சிற்பக்கலைகளஞ்சியம் | **I** மூவர்கோவில் | **N** மண்டூக்கிய காரிகை | **S** பரிணாமவாதம் |
| **E** பிரபக்திமார்க்கம் | **J** நித்தியநரகம் | **O** பன்மைவாதி | **T** சார்ந்திருத்தல் |

41. பல்லவர்கால கலையுடன் தொடர்புடைய தொகுதி
1) DGMQ 2) DGKR 3) ADGR 4) KRMQ 5) AIMR (…..)

42. சோழர்காலக் கலையுடன் தொடர்புடைய தொகுதி
1) AIKR 2) AIMR 3) IMGD 4) AIMQ 5) AIGP (…..)

43. அத்வைத வேதாந்தத்துடன் தொடர்புடைய தொகுதி
1) CFNP 2) CFNL 3) CFON 4) BJNP 5) CNJO (…..)

44. துவைத வேதாந்தத்துடன் தொடர்புடைய தொகுதி
1) BJNP 2) BJOT 3) BOTH 4) BJON 5) CFTP (…..)

45. இராமானுஜருடன் தொடர்புடைய தொகுதி
1) BJLS 2) BJEH 3) EHTL 4) ECLP 5) EHLS (…..)

☛ 46 - 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் உரிய தலைப்புடன் **<u>பொருந்தாததைத்</u>** தெரிவுசெய்க.

46. விஜயநகர நாயக்கர் காலம்
   1) கர்நாடக மாநிலத்தில் 1336 இல் விஜயநகரப் பேரரசு நிறுவப்பட்டது.
   2) விஜயநகர அரசர்கள் சங்கரரின் சிருங்கேரி மடத்திற்கு அதிகளவு மானியங்களை வழங்கினர்.
   3) விஜயநகர ஆதிக்கத்தின் கீழ் தமிழ்நாட்டை ஆண்டவர்கள் மண்டலிதர் எனக்கூறப்பட்டது.
   4) விஜயநகர அரசர்கள் வைணவ சமயத்திற்கும் பங்களிப்புச் செய்தனர்.
   5) காளமுகர், பாசுபதர் முதலிய சைவசமயப் பிரிவினர்களும் காணப்பட்டனர். (…..)

47. அனந்தசயன வடிவம்
   1) திருமால் திருப்பாற்கடலில் ஆதிசேடன் மீர் பள்ளி கொண்டுள்ள வடிவமாகும்.
   2) அனந்த என்பது அஷ்ட நாகங்களில் ஒன்று.
   3) கருமையும் மஞ்சளும் கலந்த வண்ணமுடையவர்.
   4) இந்து விக்கிரகங்களில் யோகநிலையில் படுத்திருக்கும் கோலம் அனந்தசயன வடிவம் மட்டுமேயாகும்.
   5) காஞ்சி கொள்ளவண்ணம் என்ற இடத்தில் அமைந்துள்ள அரங்கர் வடிவம் மிகவும் பெரியதாகும். (…..)

48. பிரம்மசூத்திரம்
   1) பிரஸ்தான திரயங்களுள் ஒன்று.
   2) இந்திய தத்துவ சிந்தனைகளின் வற்றாத ஊற்றாக விளங்குகின்றது.
   3) பிரம்மசூத்திர அதிகாரங்களில் அளவில் சிறியது சாதனமாகும்.
   4) பாதராயனர் என்பவரால் இயற்றப்பட்டதாகும்.
   5) இதன் நான்கு அத்தியாயங்களும் பல அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. (…..)

49. ஆத்திசூடி
   1) ஆத்திசூடி மிகச்சிறிய நூலாகும்.
   2) இது நெடுங்கணக்கு முறையில் அமைந்த நூலாகும்.
   3) நால்வகைப் புருடார்த்தங்களையும் எடுத்து விளக்குகின்றது.
   4) ஆத்திசூடியை 1851இல் ஜே.சுதன் பாதிரியார் முதன் முதலில் பதிப்பித்து வெளியிட்டார்.
   5) ஆத்திசூடிக் கூற்றுக்களுக்கும் திருக்குறளுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. (…..)

50. காசிவாசி செந்திநாதையர்
   1) யாழ்ப்பாணத்தில் குப்பிளானில் 1858இல் பிறந்தார்.
   2) செந்திநாதசுவாமி யந்திரசாலையை 1906இல் நிறுவினார்.
   3) கிறிஸ்தவ கண்டன குடாரி என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார்.
   4) மாயாவாதிகளுக்கு எதிராக கண்டனக் கட்டுரைகளை எழுதினார்.
   5) இவர் தம் வாழ்நாளின் பெரும்பகுதியை தமிழ்நாட்டில் கழித்தார். (…..)